MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :2 /Issue 2 / MAY 2025 eISSN 3049-3676 (Online)

மேன்மதி கோவை தமிழ் மன்றம்
சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
MENMATHI KOVAI TAMIL MANDRAM
INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS

கலித்தொகை குறிஞ்சிக்கலிப்பாடல்களில் இயற்கை வளங்களும் வாழ்வியல் நெறிகளும்

முனைவர் இ.சேனாவரையன்
தமிழ் இணைப்பேராசிரியர்
அரசு கலைக்கல்லூரி (தன்னாட்சி),
கோயம்புத்தூர் -641018.

Natural Resources and Life Principles in Kalithok Kurinjikalli Poems

Dr. E. Senavarayan

Associate Professor of Tamil
Government Arts College (Autonomous)
Coimbatore – 641018

Abstract:

Sangam literature and the Tolkappiyam record that the land was defined as Kurinji Nilam during the Sangam period, an area with mountains and small hills.The people who lived in the mountains and small hills called their habitation Sirukudi. The people who lived here called themselves Kundravar, Kuravar, and Iravalar. The Iravalar are now called Iravalar. In Sangam literature, the songs of Kurinjithinai are categorized into Thinai. In Kalithok, one of the Sangam literatures, the lifestyle of the people of Kurinji was examined through the Kalithok Kurinji songs with the aim of finding out whether they were prosperous or poor.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்

Volume :2 /Issue 2 / MAY 2025 eISSN 3049-3676 (Online)

முன்னுரை

மலைகளும் சிறு சிறு குன்றுகளும் உடைய பகுதி குறிஞ்சி நிலம் என சங்க காலத்தில் நிலம் வரையறை செய்யப்பட்டிருந்தது என சங்க இலக்கியங்களும் தொல்காப்பியமும் பதிவு செய்துள்ளன. மலைகளிலும் சிறு குன்றுகளிலும் வாழ்ந்த மக்கள் தங்கள் வாழிடத்தை சிறுகுடி என்று அழைத்தனர். இங்கு வாழ்ந்த மக்கள் தங்களை குன்றவர் என்றும் குறவர் என்றும் இறவுளர் என்றும் அழைக்கப்பட்டனர். இறவுளர் இருளர் என்று தற்போது அழைக்கப்படுகின்றனர்.

சங்க இலக்கியங்களில் திணை பாகுப்படுத்தி அதில் குறிஞ்சித்திணை பாடல்கள் வகைப்படுத்தப்பட்டுள்ளன. சங்க இலக்கியங்களில் ஒன்றான கலித்தொகையில் குறிஞ்சி நில மக்களின் வாழ்வியல் எவ்வாறு இருந்தன அவை செல்வ வளம் பொருந்தியதா? அல்லது வறுமை நிலை சார்ந்ததா? எனக் கண்டறியும் நோக்கில் கலித்தொகைக் குறிஞ்சி பாடல்களின் வழி ஆராயப்பெறுகின்றது.

கலித்தொகை குறிஞ்சி பாடல்களும் வாழ்வியலும்

குறிஞ்சித்திணை என்பது **“சேயோன் மேய மைவரை உலகம்” (தொல்காப்பியம், பொருளதிகாரம், நூ.)** எனத் தொல்காப்பியம் குறிப்பிட்டுள்ளது. **திணை என்பது ஒழுக்கத்தையும், இடத்தையும் உணர்த்தும். ஆதலின் குறிஞ்சி என்பது கூடல் ஒழுக்கத்தையும் மலையும் மலை சார்ந்த இடத்தையும் குறிக்கும். (தொல்காப்பிய ஆராய்ச்சி , சி.இலக்குவனார், ப.132)** இதனடிப்படையில் கலித்தொகை குறிஞ்சிப் பாடல்களில் இயற்கையோடு ஒன்றிய தலைவியின் இயல்புகள் அமைந்துள்ளது பாங்கு ஆராயப் பெறுகின்றது.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :2 /Issue 2 / MAY 2025 eISSN 3049-3676 (Online)

கலித்தொகையில் 37 **வது பாடல்** குறிஞ்சித் திணைப்பாடல் **ஆகும்**. **இதனைக்** கபிலர் பாடியுள்ளார்.

கயமலர் உண்கண்ணாய்!காணாய்! ஒருவன்
வயமான அடித்தேர்வான் போல.... என்று தொடங்கும் பாடலில் வலிய யானை வருகின்ற மலை சார்ந்த பகுதி.

" **தோல் நிகழ்வு உற்ற துயரால் துணி தந்து ஓர்**
நாண்இன்மை செய்தேன் நறுநுதால்! ஏனல்
இனக்கிளி யாம்கடிந்து ஓம்பும் புணத்து அயல்
ஊசல்ஊர்ந்து ஆட ஒரு ஞான்று வந்தானை"

என்னும் வரிகளின் மூலம் தினைப்பயிர் நிறைந்திருக்கும் நிலத்தில் முற்றியத் தினைக் கதிரை கிளிகள் வந்து உண்ணாதவாறு கிளிகளைத் துரத்திச் சென்றேன். அங்கு கட்டப்பட்டிருந்த ஊஞ்சலில் உட்கார்ந்து ஊஞ்சல் ஆடினேன். அவன் வருவான் என அறிந்தே நான் என் கால் விரல்களாலே நிலத்தை உந்தி உந்தி ஊஞ்சல் ஆடினேன் என இயற்கை சூழ்ந்த பகுதியில் தலைவி ஊஞ்சல் விளையாடிய இன்பத்தைக் கபிலர் கூறியுள்ளார். **பெண்கள் ஊஞ்சல் ஆடுவது குறித்து பிள்ளைத்தமிழ் இலக்கியத்தில் பத்து பருவங்களில் ஒன்றாகச் சுட்டப்பெற்றுள்ளது.** (**மீனாட்சியம்மன் பிள்ளைத்தமிழ்**, **குமரகுருபரர்,ப-6**)

மேலும் கபிலர் பாடிய 38**வது பாடலான**,

இமையவில் வாங்கிய ஈர்ஞ்சடை அந்தணன்
உமைஅமர்ந்து உயர்மலை இருந்தன னாக
ஐஇரு தலையின் அரக்கர் கோமான்
தொடிப்பொலி தடக்கையின் கீழ் புகுந்து,

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :2 /Issue 2 / MAY 2025 eISSN 3049-3676 (Online)

அம்மலை எடுக்கல் செல்லாது உழப்பவன் போல,
உறுபுலி உறுஏயிப்பப் பூத்த வேட்கையைத்
கறுவுகொண்டு அதன்முதல் குத்திய மதயானை
நீடுஇரு விடரகம் சிலம்பக் கூஉய்த்தன்
கோடுபுய்க் கல்லாது உழக்கும் நாட! கேள்.

என்னும் பாடலின் வழி இமயமலையும் மலை நாட்டின் வலிமையானப் புலியைப் போன்று தோன்றும் வேங்கை மரத்தைக் கோபங்கொண்டு மதயானைத் தன் இரு தந்தங்களால் குத்தியது. தந்தங்களைத் திருப்பி எடுக்கமுடியாமல் வருத்தமுற்று மலையே எதிரொலிக்கும் படி கூக்குரல் இட்டும் கத்தியது என்னும் இயற்கைக் காட்சியைப் பதிவு செய்துள்ளார் கபிலர்.

கபிலர் பாடிய 39 ஆம் பாடலில்,

தலைவன் நாட்டிலே தினை விளையும் காட்டிலே பறவைகளை விரட்ட பரண் போடப்பட்டுள்ளது. அப்பரணிலே சந்தனம் புகைக்கப்படுகிறது. அச் சந்தனப் புகை வான் வரை சென்று வானில் ஊர்ந்துவரும் முழுமதியை ஒலி மழுங்க வைக்கிறது. இதை மலையின் மீது கட்டப்பட்டிருக்கும் பெரிய தேன் அடை என்று கருதி அதை எடுக்க, கால் வைத்து ஏறுவதற்கு ஏற்றவாறு மூங்கிலில் அதன் கணுக்களை அளவாய்த் துண்டித்து ஏணி சார்த்துவர். அப்படிப்பட்ட பெருமையுடைய மலைநாட்டைச் சார்ந்தவன் காதலன் ஆவான்.

இவனுக்குப் பெண் கொடுக்க மறுக்கும் மலை நாட்டில் சிற்றூரில் உள்ளவர்களே! கேளுங்கள். இம்மலையில் வாழ்பவர் தங்கள் பெண்ணை நீர் அடித்துச் சென்று ஆபத்து நடந்தபோது இவள் உயிரை காப்பாற்றி

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்

Volume :2 /Issue 2 / MAY 2025 eISSN 3049-3676 (Online)

உதவி செய்தவனுக்குக் கொடுக்காமல் வேறு ஒருவனுக்கு கொடுக்க எண்ணி அறவழியைத் தவறி நடக்கின்றனர். அதனால் இனி இவ்வூரில் வள்ளி கொடியில் கிழங்கு விளையாது. மலையின் மீது தேன்கூடு கட்டாது. கொல்லையில் திணை விளையாது.

ஆனாலும் பார்த்த கண்கள் பார்த்துக்கொண்டே இருக்க வேண்டும் என்று ஆசைப்படுகிற அளவுக்கு காந்தள் பூக்கள் மணம் வீசுகின்ற கரிய மலை இது. இம்மலையிலே விளைந்த மூங்கிலைப் போன்ற மென்மையானத் தோள்களையும், அழகினையும் உடைய குறவர் மகளிர் தன் கணவரையே தெய்வம் என்று வணங்கி எழும் பண்புடையவர். ஆகையாலே, அவர்தம் தந்தை முதலிய ஆடவர் விடும் அம்புகள் இலக்கு தவறாது. சரியான முடிவு தான் எடுப்பர் என்று மணஞ்செய்துதர மறுத்த உறவினர் இடையே, தோழி வளர்ப்புத்தாயிடம் முதலில் கூறினாள். இவள் தாயிடம் கூற, தாய் மற்றவருக்குக் கூற, அதைக் கேட்ட தமையன்மார் ஒரு முகூர்த்த நேரம் (சிறிய நேரம்) மனம் கொதித்து, அம்பையும் வில்லையும் எடுக்கச் சென்றனர். எழுந்து கலங்கினர். பின் இருவரிடமும் குற்றமில்லை என நினைத்து கோபம் குறைத்தனர். வெட்கத்தால் தலை குனிந்து இருந்தனர்.

எனவே, என் தோழியே வா! நீயும் உன் அன்புக்காதலனும் விரைவில் திருமணம் செய்து கொள்ள மலைவாழ் முருகனுக்கு மகிழும்படி, கைகோர்த்து கூத்தும் பாட்டும் நிகழ்த்துவோம். யான் பாட, நீ எடுத்துப் பாடு என்றாள்.

அதுகேட்ட காதலி, என் திருமணம் நடக்கும் நல்ல நாள் வரும்வரை நம் உறவினர்கள் வெட்கத்தைத் தாங்கியிருப்பர். அதுவும் அவர்கள் செய்த நல்வினையே ஆகும் என்றாள்.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :2 /Issue 2 / MAY 2025 eISSN 3049-3676 (Online)

புணர்ச்சி வெளிப்படையாகவே நடக்கும். இனி கனவில் உண்டாகும் கூட்டத்தை நீக்கிவிடலாம் என்றாள்.

அதைக் கேட்ட தோழி, நீயும் உன் காதலனும் திருமணஞ்செய்து கொள்கிறபோது ஒருவரை ஒருவர் முன்பு அறிந்து கொள்ளாதவர் போல நடந்து கொள்வீரோ! அவ்வாறு எனின் நானும் உங்கள் பழைய உறவை தெரியாதவள் போல நடந்து கொள்வேன்

நீ வெட்கத்தால் மேகத்தைத் தொடும் மலை நாட்டு மணமகனோடு திருமணம் நடக்கும்போது கண்களை மூடி கொள்வாய். மணக்கோலத்தைக் காணாதக் கண்கள் என்ன கண்களோ? என்று ,நகைச்சுவை தோன்ற கேலி பேசினாள்.

உடனே காதலி, தோழி அதை உன் கண்கள் கொண்டு தான் நான் பார்ப்பேன் என்றாள்.

இவ்வாறு குறிஞ்சி நில தலைவன் தலைவியின் வாழ்வியலில் குறிஞ்சி நிலத்தின் இயற்கையை,

“காமர் கடும்புனல் கலந்து எம்மோடு ஆடுவாள்
தாமரைக்கண் புதைத்துஅஞ்சித் தளர்ந்துஅதனோடு ஒழுகலான்
நீள்நாக நறுந்தண்தார் தயங்கப் பாய்ந்து அருளினால்
பூண்ஆகம் உறத்தழிஇப் போதந் தான் அகன்அகலம்
வரும்முலை புணர்ந்தன என்பதனால் என்தோழி !
அருமழை தரல்வேண்டில் தருகிற்கும் பெருமையே
அவனும்தான், ஏனல் இதனத்து அகிற்புகை உண்டு இயங்கும்
வான்ஊர் மதியம் வரைசேரின் அவ்விதம்

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :2 /Issue 2 / MAY 2025 eISSN 3049-3676 (Online)

தேனின் இறால் என ஏணி இழைத்திருக்கும்
கான்அகல் நாடன் மகன்
சிறுகுடியீரே! சிறுகுடியீரே!
வள்ளிகீழ் வீழா வரைமிசைத் தேன் தொடா
கொல்லை குரல்வாங்கி ஈனா மலைவாழ்நர்
அல்ல புரிந்து ஒழுகலான்;
காந்தல் கடிகமலம் கண்வாங்கு
கண் வாங்கு இருஞ்சிலம்பின்
வாங்குஅமை மென்தோட் குறவர் மடமகளிர்
தாம்பிழையார் கேள்வர்த்
தொழுது எழலால் தம்ஐயரும்
தாம்பிழையார் தாம்தொடுத்த கோல்
எனவாங்கு,
அறத்தொடு நின்றேனைக் கண்டு திறப்பட
என்னையர்க்கு உயிர்த்துரைத்தாள் யாய்;
அவரும் தெரிகணைச் நோக்கிச் சிலைநோக்கி கண்சேந்து
ஒருபகல் எல்லாம் உருத்துஎழுந்து ஆறி,
இருவர்கண் குற்றமும் இல்லையால் என்று
தெருமந்து சாய்த்தார் தலை.
தெரியிழாய்! நீயுநின் கேளும் உணர வரைஉறை தெய்வம் உவப்ப உவந்து
குரவை தழிஇயாம் ஆடக் குரலையும்

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :2 /Issue 2 / MAY 2025 eISSN 3049-3676 (Online)

கொண்டு நிலைபாடிக் காண்; நல்லாய்
நல்நாள் தலைவரும் எல்லை நமர் மலைத்
தம்நாண்தாம் தாங்குவார் எந்நோற் றனர் கொல்?
புனவேங்கைத் தாதுஉறைக்கும் பொன் அறை முன்றில்
நனவில் புணர்ச்சி நடக்குமாம் அன்றோ?
நனவில் புணர்ச்சி நடக்கலும் ஆங்கே
கனவில் புணர்ச்சி கடிதுமாம் அன்றோ?
விண்தோய்கல் நாடனும் நீயும் வதுவையுள்
பண்டுஅறியா தீர்போல் படர் கற்பீர் மற்கொலோ?
பண்டு அறியா தீர்போல் படர்ந்தீர் பழங்கேண்மை
கண்டுஅறியா தேன்போல் கரைக்கிற் மன்கொலோ?

என்னும் பாடல்வழி உணரவைத்துள்ளமைக் காணலாம்.

குறிஞ்சிக் கலி பாடல் 40 - ல் இயற்கை வளங்கள் குறித்து தலைவன் தலைவி வாழ்வியலோடு வெளிப்படுத்தியுள்ள பாங்கு

என் அன்புக்கு உரியவன் அவன் வாழும் மழையை வாழ்த்தி பாடுவோம் என மறைமுகமாக சொற்களாலேயே காதலி ஒரு குத்து குத்துகிறார். அதாவது, எனக்கு நோய் தருபவன் மலையாக இருந்தாலும் அவன் நிலத்தில் திணை விளைந்து பயன் தருகிறதே? இது என்ன நியாயம்? என்றாள்.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :2 /Issue 2 / MAY 2025 eISSN 3049-3676 (Online)

அது ஏற்ற தோழி அழகிய நெற்றியையும், அழகு பெருகும் கூந்தலையும், அழகிய மூங்கில் போன்ற பெருமை உடைய மெல்லிய தோள்களையும், பூ மணம் வீசும் கன்னத்தை உடையவளே! காதலன் மூங்கில் மணக்கும் மலையைத் தூற்றி படாமல் வாழ்த்தி பாடு. பின்பு, யானும் வாழ்த்தி பாடுகிறேன் என்றாள். இப்படி கேட்டுக் கொண்ட பிறகும், காதலன் மழையை வாழ்த்தி பாடாதக் காதலியை நோக்கி தோழி கீழ்க்கண்டவாறு வாழ்த்தி பாடுகிறார். தன்னை நாடி வந்தவர்களின் வருத்தத்தை நீக்கும் மலை அவன் மலை. மலையில் தேன் ஒழுகும்படி காந்தல் மலர்கள் அக்கொடியில் அசையும். இது எவ்வாறு இருக்கும் என்றால், குறிஞ்சி மகளிர் தான் குறைகள் நீங்க இரு கைகளையும் கூப்பி மலைவாழ் கடவுள் முருகன் உறையும் மலையை தொழும் கைகள் போன்று இருக்கும். எனவே, தெய்வத்தைத் தொழும் கருத்து இல்லாதக் காந்தல்கூட தெய்வத்தைத் தொழுவது போல, நீ தொழவில்லை எனில் காதலில் தேன் பயன்படாமல் கீழே ஊற்றுவதைப் போல, நீ வேண்டும் திருமணமும் நடக்காமல் போகும். மேலும், நான் காதலித்த ஒரு பெண் வருத்தமுற்று அழகு கெடுமானால் அவரை விட அதிகமாக வருத்தம் அடைபவள் வாழும் மலை அது. மழையில் கல்லாத ஆண் குரங்கு கூட காதலிலேயே இன்பம் காணாமல் கற்றறிந்த சுற்றத்தாரிடம் போய் பெண் கேட்பது போல, மென்மையான விரலையுடைய பெண் குரங்கைத் தனக்கு தர வேண்டும் என்று கேட்கும். இதைக் கேட்ட காதலி சற்று எரிச்சல் அடைந்தவளாய் உயர்ந்த மலைகள். பக்கமெல்லாம் மலைகள். உண்மைதான்.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :2 /Issue 2 / MAY 2025 eISSN 3049-3676 (Online)

ஆனால், கட்டவிழ்ந்த கிளைகள் மறைத்த பூக்கள் மலர்ந்துள்ள நுனிக்கிளைகள் உள்ள தளிரைப் போன்ற என் அழகிய மேனி கெடுமாறு காதல் நோய் தந்தவன் மலையை இனி இழிவாக பாடுவோம் என்றாள்.

மேலும், இவனது குளிர்ந்த மலைச்சாரலில் ஒரு மலரில் தேனை உண்ட வண்டு அதைத் துறந்துவிட்டு வேறு மலருக்குச் செல்வது போல என் அழகை அனுபவித்து என்னைத் துறந்து செல்பவனின் மலையாக உள்ளது. அவ்வாறு இருந்தும் வானை முட்டும் மலையில் தெய்வமகளிர் பந்து ஆடி, ஆடிய இளைப்புநீங்க குளிர்ந்த அம்மலை அருவியில் நீராடுவர் எனில் ஏன் இந்த முரண்பாடோ! எனக்கு காதலனை அன்பு மிகுதியால் குறைத்து பேசினாள்.

தோழி மறுத்து கூறுகிறாள். அப்படி அல்ல! அவன் மலையில் அழகுடைய ஆண் யானை, தன் பெண் யானை முதன்முதலாகக் கரு உற்றிருந்தபோது, அதனுடைய குட்டி சுமக்கும் வருத்தம் நீங்க, அதிக அன்பு கொண்டு இனிய கணுக்களுடைய முற்றிய நீண்ட கரும்பினை உடைத்து தின்னக் கொடுக்கும் அப்படிப்பட்ட மலை அவன் மலை என்று பாட, இவற்றையெல்லாம் காதலன் மறைவாக நின்று கேட்டான் உள்ளம் நிறைந்த மகிழ்ச்சி கொண்டான். காதலியின் ஆழமான வருத்தம் உணர்ந்தான். பயந்து பயந்து புணர்ந்ததால் தழுவி மனம் நிறைவடையாத மெல்லிய மலைகளை உடைய காதலியின் மார்பு அழகடையுமாறு அவள் மகிழ்ந்திருக்க மணம் செய்து கொள்ள வந்தான் என்று தோழி அவளிடம் கூறும் அழகு படிக்க படிக்க தெவிட்டாத இன்பம் தருகின்றது என்பதை இந்த பாடலின் மூலமாக நாம் அறிந்து கொள்ள முடிகிறது. அந்தப் பாடலைப் பின்வருமாறு காண்போம்.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :2 /Issue 2 / MAY 2025 eISSN 3049-3676 (Online)

“அகவினம் பாடுவாம் தோழி அமர்க்கண்
நகைமொழி நல்லவர் நாணும் நிலைபோல்
தகைகொண்ட ஏனனுள் தாழ்குரல் உரீஇ
முகைவளர் சாந்துஉரல் முத்தார் மருப்பின்
வகைசால் உலக்கை வயின்வயின் ஓச்சிப்

பகைஇல்நோய் செய்தான் பயமலை ஏத்தி
அகவினம் பாடுவோம் நாம்!
ஆய்நுதல் அணிகூந்தல் அம்பணைத் தடமென் தோள்
தேன்நாறு கதிப்பினாய் யானும் ஒன்று ஏத்துகு
வேய்நரல் விடரகம்நீஒன்று
பாடித்தை;
கொடிச்சியர் கூப்பி வரைதொழு கைபோல்
எடுத்த நறவின் குலையல் அம் காந்தள்
தொடுத்ததேன் சோரத் தயங்கும் தன் உற்றார்
இடுக்கண் தவிர்ப்பான் மலை கல்லாக்கடுவன் கணம்மலி சுற்றத்து

மெல்விரல் மந்தி குறைகூறும் செம்மற்றே
தொல்எழில் தோய்ந்தார் தொலையின்
அவரினும் அல்லற் படுவான் மலை.
புரிவிரி புதைதுதை பூத்ததைந்த தாழ்சினைத்
தளிர்அன்ன எழில்மேனி தகைவாட நோய்செய்தான்

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :2 /Issue 2 / MAY 2025 eISSN 3049-3676 (Online)

அருவரை அடுக்கள்நாம் அழித்தொன்று பாடுவாம்
விண்தோய் வரைப்பந்து எறிந்த அயாவிடத்
தண்தாள் அருவி அரமகளிர் ஆடுபவே!
பெண்டிர் நலம்வெளவித் தன்சாரல் தாதுஉண்ணும்
வண்டின் துறப்பான் மலை.

ஒடுங்கா எழில்வேழம் வீழ்படிக்கு உற்ற
கடுஞ்சூல் வயாவிற்கு அமர்ந்து, நெஞ்சினைத்
தீங்கண் கரும்பின் கழைவாங்கும்; உற்றாரின்
நீங்கலம் என்பான் மலை
என நாம்

நன்மலைப் பாட நயவந்து கேட்டருளி
மெய்ம்மலி உவகையன் புகுதந்தான், புணர்ந்து ஆரா
மென்முலை ஆகம் கவின்பெறச் செம்மலை ஆகிய மலைகிழ வோனே”

என்னும் பாடல் வழி குறிஞ்சி நிலமும் கருப்பொருளாகிய திணை, தேன், மூங்கில், ஆகியவை விளையும் மலை சார்ந்த பகுதியாகும். இவ்வாறு குறிஞ்சிக்கலியில் 29 பாடல்களில் குறிஞ்சியின் இயற்கையை உணர முடிகின்றது.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :2 /Issue 2 / MAY 2025 eISSN 3049-3676 (Online)

நிறைவுரை

குறிஞ்சி நில மக்களின் வாழ்வியல் செல்வ வளம் பொருந்தியதாக உள்ளது என்பதும், இயற்கை வளங்கள் நிறைந்து காணப்பட்டதையும், அக அறம் தவறினால் இயற்கை அழகழந்தும் வறுமை நிலையும் உருவாகும் என்றும், துன்பம் தோன்றும் நிலையில் உதவி செய்யும் மனமுடையவர்களாக வாழ்ந்துள்ளனர் என்பதும் கலித்தொகை குறிஞ்சி பாடல்களின் வழி ஆராய்ந்து அறியப்பெற்றுள்ளன.

துணை நூற்பட்டியல்

1. தொல்காப்பியம் பொருளதிகாரம் இளம்பூரணர் உரை முதற்பதிப்பு 1954.
2. தொல்காப்பிய ஆராய்ச்சி, பேராசிரியர் சி.இலக்குவனார் வள்ளுவர் பதிப்பகம், 1961.
3. மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ், குமரகுருபரர் சைவசித்தாந்த நூற்பதிப்பு கழகம்; திருநெல்வேலி, 1964